நாள்: 20-12-2017

பதிப்பு - 17

படைப்பு குழுமம்

# மின் இதழ்



கவிதைகளின் தொகுப்பு

ஒரு
கணித தேர்வுக்கான
நாளின்
அதிகாலையில்,
அம்மாவின்
புறங்கை
கழுத்து
தொட்டுப்பார்த்ததும்
உறுதியாக்கப்பட்ட
விடுமுறை..

பனிகொட்டும்
பாதையின்
பொடிநடை
பயணத்தில்..
உள்ளங்கையை
சூடேற்றிய
அப்பாவின்
கைவிரல்கள்..

மருத்துவமனையின்
மரபெஞ்சில்
தும்மல்களோடு
காத்திருக்கையில்..
அருகிலமர்ந்து
நட்பாகிப்போன
இருமல்
தோழி,,

அரை
டிரவுசரை
தேய்த்தபடி..
வீடு
சேர்ந்ததும்,
தடித்துப்போன
பின்புறமிரண்டிலும்
பூசப்பட்ட
உப்புக்கல் ஒத்தடம்..

கருப்பு
தேநீரில்,
உண்ணாவிரதம்
முடித்துக்கொண்ட
மாலையில்..
சாம்பிராணி
புகைசூழ,
அண்ணாக்கயிற்றில்
கட்டிவிடப்பட்ட
பனை ஓலை ஏடு..

பிதற்றல்
இரவில்..
தலையணையை
பகிர்ந்து
கொண்ட,,
வாசல்
துடைப்பம்..

இவையத்தனையும்
மீளாதவை
என்றாலும்,,,
இப்பொழுதும்
பருவமழை
காலங்களில்,
தப்பாமல்
வந்து நிற்கிறது,
"அதே
காய்ச்சல்......!"

**கவிதை மொழியன்**

தொலைகாட்சியில் அழகி போட்டி
நடக்கிறது அதன் அருகில்
மெல்ல குழந்தை.

**இரா.புருஷோத்தமன்.**

# பெருங்காற்று இயல்பிலில்லை

இசைத்தல்
சிறகின் இன்னிசையோ
அளாவித் துழாவும்
ஒரு விசையோ
மினுங்கும் பால்வெளியில்
மிச்சத்தின் மறுபக்கம்...

யாதும் ஊரே யாரோடு இப்பாரே...

கனவுக்குள் குட்டியிட
மயிலிறகு நிறம் தொலைக்கலாம்
மறுவிசை திசை அறிய
ஆறு மனமே
ஏழாவதும் பிறவியே...

காணுதல் சூட்சுமம்
கண்டதும் ஆகமம்
காணலாம் தன் அகம்...

பிரிதொரு நகர்தல்
பிரியாதொரு நிகழ்தல்
விழுதல் அழுதல் எழு தன்...

முதலாகி மூன்றாகி
பகலுக்குள் உடையும் பெருவெளி
இரவுக்குள் இயலுமா எனது
இயன்றதா உனது....

பிரபஞ்ச இருபக்கம்
திறவா நூலிழையின்
தீர்த்தக்கரை யதார்த்தங்கள்...

அங்கே யாருமில்லை
யானையுமில்லை
கால் கட்டிய சங்கிலி மட்டும்
கண்டவர் கண்களாகிறது
காணாதோர் கண்ணிகளாகிறது...

இசைக்காத சிறகெல்லாம்
பழுத்த இலையென
பின்தொடரலாம்
இயல்பில் இல்லாத பெருங்காற்று
வரும் போகும்...

**கவிஜி**



# தாய்மையெனப்படுவது யாதெனில்

உயிர் உருக்கி உயிர் யாசிக்கும்
ஊசி முனை தவம்.
எவராலும் விடை காண முடியா
பத்து மாத புதிர்.
முகத்தினில் உடலில் தங்க முலாம் பூசி
உயிரினுள் உறையும் உயிரை
அலங்கரிக்கும் அற்புதம்.
பல நூறு பறவைகளின் பாடலொலி
ததும்பி வழியும் அழகிய விருட்ஷம்
விதைக்குள் உறங்குவதைப் போல்
கண்களையும் மனதையும் நிறைத்து
நடனமிடும் நதி
மூலஊற்றில் துளிர்ப்பதைப் போல்
வலி பிறந்து
வழி பிறக்க
கருவறைக்குள் காத்திருக்கும்
கடவுளின் கருணை.

**ஜி.சிவக்குமார்**



அழுக்கைத்தவிர
வேறெதுவும் இல்லாத
நைந்து போன சட்டை

எண்ணெய் இன்றி
கோரமாக தொங்கும்
தலைமுடிக்குள்
பாசி படர்ந்த பற்கள்

இடைவேளையின்றி குருதி குடிக்கும்
கொசுக்களையும்
இரக்கமின்றி
விலகிச்செல்லும் மனிதர்களையும்
கண்டுகொள்ளாத கண்கள்

அமைச்சரவை மாற்றம் முதல்
அடித்தட்டு மக்களின் நலனை பாதித்த ரூபாய்
நோட்டு தடை வரை
எதையும் ஏற்றுக்கொள்ளாத சிந்தனை

மூக்கை பிடிக்க வைக்கும்
சாக்கடை நாற்றத்திற்கு
மத்தியில்
மூச்சுவிட்டுக்கொண்டு
இன்னும் எழுத்துவடிவம் பெறாத மொழியில்
ஏதேதோ பேசிக்
கொண்டிருந்தவனிடம்

சில சில்லறைக்காசுகளை
கையில் திணித்து
ஐயோ பாவம்
பைத்தியமென்றேன்

அவன்
சட்டென எழுந்து
தலையை சொறிந்து
என்னை நோக்கி
நொடி நேர புன்னகையை வீசிச்சென்று
நீண்ட நாட்களாகிவிட்டபோதும்

அவனின் பார்வையில்
நான் எப்படியோ
எனும் எண்ணத்திலிருந்து
இன்னும் என்னால் மீளமுடியவில்லை

**மு. சாத்தப்பன்**

நடக்கிறது அதன் அருகில்
மெல்ல குழந்தை.

**இரா.புருஷோத்தமன்.**

அப்பாவின் ஞாயிற்றுக்கிழமைகளில்தான்
அவரின் கைகளுக்குள்
நான் பொம்மையாவேன்...
மடியிலமர்வேன்
தோள்களில் சாய்வேன்
கன்னங்கள் சிவக்க
முத்தங்கள் பெறுவேன்
உருண்டை சோற்றை
வாய் குழப்பி உண்ணுவேன்
மிதிவண்டி முன்கூடையில்
அமர்ந்து உலகத்தை வேடிக்கை
பார்த்துக்கொண்டே செல்வேன்
மதியநேரங்களில்
நெஞ்சுகளின் ரோமங்களில்
புதைந்து இதயத்துடிப்பின்
தாலாட்டின் வழியாக தூக்கம்
கொள்வேன்
கயிற்றுக்கட்டிலில் தலையணையில்
படுத்துக்கொண்டு
இரவில் நட்சத்திரக்கதைகள்
கேட்டிருவேன்...
மேகங்கள் கடப்பதை போல
கடந்து விடுகிற
அந்நாளின் இறுதியில்
அப்பாவின் கைகளுக்குள்
பொம்மையாகிப்போவேன்...
அப்பாவின் ஞாயிற்றுக்கிழமை
வரும் வரை இருவரும்
காத்திருப்போம்

**ராம் பெரியசாமி**



# ஆன்மாவின் ஞாற்சி

இருவாட்சிப் பறவையின் அலகு
இருள் உறையும் காட்டின் மரப்பொந்தில்
பறந்தொளிவது போல்
இன்றைக்கும் சூரியன் மறைகிறது

தனிமையின் தூபி
தவித்து இருளைத் தாங்குகிறது

தூபியின் உச்சியில் எனது ஆன்மாவின் ஞாற்சி
கிழக்கு மறைபொருளெனத் தேங்கி
உயரும் ஒளியைப் பருகுகிறது

கண்களில் ஒளி ஊறும் சுழியின் மையத்தில்
இவ்விரவு விதையாகிறது
கண்ணீர் விடியும் முன் இதை விளையச் செய்யும்

இரவில் மலரும் கானக மலர்கள்
இதயத்தை தனது வாசனையின் தூபத்தில் ஏற்றிச்
செல்கையில்
சிறுத்தைக் குட்டிகள் தன் தாயின் உடலில் அசையும்
காட்டின் கம்பீரத்தை நிமிண்டுகின்றன

மரக்கிளைகள் சாம்பல் நிலங்களாய்
அசைவின்றிக் கிடப்பதையும்
தேவாங்குகளின் விழிகளில்
ஆதி எழுத்துக்கள் அசைவதையும் காண்கிறேன்

முத்த நீராலும் மலைப் படுகையின் மண்ணாலும்
குழைத்துக் கட்டப்படும் இருவாட்சியின் பொந்து
மழைக்காட்டின் குறியீடு
இவ்விரவில் இதன் அலகின் மஞ்சள்
சூரியனின் உட்கரு

அக்கூட்டின் பொன்மை
இமைகளில் காந்தாரம் இசைக்கையில்
எனது மூளையின் நாளமில்லாச் சுரப்பிகள்
அமைதியுறுகின்றன

காட்டுப் பட்டாம்பூச்சியின் சிறகு
அன்னவஸ்திரமாய்
மேகத்தினுள் தெளியும் நிலவை மறைத்துப் பறக்கிறது

கிழக்கில் உருகும் நிலவை
கைரா என்கிறேன்

கருப்பையின் இறக்கைகளாய்
எனது கைகள் எனைவிட்டுப் பறப்பதையும்
இதயம் சூலமென உறைவதையும்
அவள் பார்க்கிறாள்

பின் என்னோடு பேசியபடி
பின்னிரவின் பிஞ்சு விரல்களினால்
சூரியனைத் திருப்புகிறாள்

காற்று குளிரை ஈனத்துவங்குகையில்
பகல் செம்பு வில்லெனப்
பாய்ந்து வருகிறது

**தேன்மொழி தாஸ்**

# என் கனவின் கொலைகாரன்

கொலை செய்யப்பட்டுக்கிடந்தது
என் கனவு...
வாழ்வின் தாழ்வாரங்களின் மூலையில்
குத்து காயங்களுடன் அது கிடத்தப்பட்டிருக்கிறது....
யார் செய்திருப்பார்கள்..?
கேள்விகளின் பெருமூச்சில் கரைகிறது காலம்..
ஆனாலும்
ஒரு துப்பறிவாளனாய் தேடியலைகிறேன்...!
அவன் தான் கொன்றிருக்கவேண்டும்
நெருக்கமான நண்பனின் மீதுதான்
முதல் சந்தேகமெழுந்தது..
சீச்சீ... தன் வலப்புறம் எனக்கு
வாரிக்கொடுத்தவனவன்...
நட்பு கனவை வளர்க்கும் காலை வாரிவிடாது....
அப்பாவின் மீது அடுத்து திரும்பியதந்த சந்தேகம்..
என் கனவின் மீது அவர் வசவுகள் உமிழ்ந்ததுண்டு
ஏறி மிதித்ததில்லை...
கொலைக்கான பட்டியலிலிருந்து
விடுவித்துவிட்டேன் அவரை...
ஆம் அவர்கள்தான்...
என் கனவின் கழுத்து நெறித்தது அவர்கள் தான்...
வகுப்பறைகளை பிணவறையாக்கியவர்கள்
உண்டதை கக்கி மீண்டும் உண்ணவைத்தவர்கள்.
இல்லை அவர்களில்லை...
கல்வி பீடங்களின் கட்டளை மீறி
வேறேதும் செய்யாமல் வாய் கட்டப்பட்டவர்கள்...
கோபத்தின் பட்டியலிலிருந்து
விடுவித்துவிட்டேன் அவர்களை...
ஒரு வேளை அவளாய் இருக்குமோ...
காதலையும் கனவையும் அவளிடம்தான்
ஆசையாய்ச் சொன்னேன்...
நூலறுந்த காற்றாடியாய் என்னை அறுத்து
வேறு திசையில் விழச் செய்தவள்...
இருக்காது... அவளா கொலை செய்வாள்...
குடும்ப நிர்பந்தம்.. கூவியழுக்கூட முடியாத
அவளென்ன செய்திருக்க முடியும்...!
பின் யார் செய்திருப்பார்கள்...?
இப்படி.... வாழ்வின் அறைகளில்
வந்து போன வசித்துப்போன
ஒவ்வொரு பாத்திரங்களையும்
தனித்தனியாய் பரிசீலித்துப்பார்த்தும்
விடையேதுமில்லை...
வந்தவர் அனைவரும் தந்தவையனைத்தும்
காயங்களாய்.. தழும்புகளாய் இருக்க...
யார் செய்ததந்த கொலையை
என கண்டுபிடிக்க முடியாமல்
மனம் குமைந்து உடல் தளர்ந்து
சோர்ந்தமர்ந்த வேளையில்தான்
கண்டுபிடித்தேன் அந்த கொலைகாரனை...
இப்பொழுதும்
என் கனவின் உடலில் வழியும் ரத்தம்
அவன் கைகளிலும் பச்சையாய்
வழிந்துகொண்டிருந்தது...
கால தாமதமாய்த்தான் அவனை
கண்டுபிடித்தேன்...
காலத்தை கண்டு அஞ்சி
முடிவெடுக்கத்தெரியாமல்
முகம் மறைத்துக்கொண்ட ஒருவன் தான்
என் கனவின் கொலைகாரன் என
கால தாமதமாய்த்தான் கண்டேன் அவனை...
உறைந்த குருதியுடன்
நிலைக்கண்ணாடியின் முன்
அலட்சியமாய் அமர்ந்திருந்த அவனை
கண்ணாடி பிம்பத்தில் உற்று நோக்கியபோது
அச்சு பிசகாமல்......
அவன் என் சாயலில் இருந்தான்....

சந்துரு

எப்பொழுதும் போலவே பறவைகள் வீடுமாறி
வந்தமர்ந்தனவாம்
எனக்கு இந்த நகரவீதி
அந்நியத்தை பழக்குகிறது
முன்பு பார்த்த வீதிகள் அல்லல் அவை,
நெடுகாலம் இந் நிலத்தில் விளைந்தவர்கள் நாங்கள்
தூக்கமிலந்த நடுயிரவொன்று
போர்வைக்குள் புரண்டு புரண்டு படுக்கிறது
எங்களுக்கென தாலாட்டு பாடிய தண்டட்டிகள்
முற்றிபோய் தான் யாரென்று போவோர்
வருவோரிடத்தில் கண்பீலை வழிய
கேட்டுவைக்கிறார்களாம்
கெஞ்சுகிறார்களாம்
உங்கள் கைகளில் தவழ்ந்த நாங்கள் வேர்பிடித்து
விட்டோம் ,
ஆனால் நிலம் எங்களுடையது அல்ல
பண்டிகை முடிந்து தேங்கிய கரும்புச் சக்கைகளை ஏற்ற
வண்டி வந்திருப்பதாக சொன்னார்களாம்
ஆளவரமில்லாமல் ஏறிப்போய்விட்டாளாம் ராக்காயி
பாட்டி

எப்பொழுதும் போலவே பறவைகள் வீடுமாறிதான்
வந்தமர்ந்தனவாம்...



**வினோத்**

ஸ்கைப்பில் அழைப்பு துண்டிக்கபடாவிடில்
நாங்கள், எங்களது காதலை
ஒருவருக்கொருவர்
இப்பொழுதே பகிர்ந்திருப்போம்.
நானோ, கால்நடையாய்
காலத்தை பின்னோக்கி மேய்ந்தபடி சென்று
வாட்சப்பில் கேட்டேன் ;
" என் காதலை ஏற்பாயா? " என்று..
அவளோ, புற்களை போல் அசைந்தவாறு
பின்னோக்கி நகர்ந்து
பேஸ்புக் வழியாய் கேட்கிறாள் ;
" நான் எப்படி ஏற்காமலிருப்பேன்? " என்று..
நான் பாம்பை போல்
மேலும் பின்னோக்கி ஊர்ந்து சென்று
யாஹூவில் இருந்தபடி கேட்கிறேன் ;
"உனக்கு, என்னை எவ்வளவு பிடிக்கும்"? என்று..
அவளோ, தவளையை போல்
துள்ளிக் குதித்தவாறு சென்று
ஆர்குட் வழியாய் கூறுகிறாள் ;
" உனக்கு என்னை பிடிப்பதைக் காட்டிலும்
நூற்றி நாற்பது சொற்கள்
அதிகமாய் பிடிக்கும். " என்று..
அவளது தொலைபேசி எண்ணிற்கு
என் முழுக் காதலையும்
குறுஞ்செய்தியாய் தட்டச்சு செய்கையில்,
" நிறுத்து. காதலை பகிர
இன்னுமே பின்னோக்கி செல்வோம்" என்றபடி
தபால்காரனின் மிதிவண்டியாய்
மணி அடித்த வண்ணம் செல்கிறாள்
கடிதத்தில் காதலை வரைய..
நானோ, பறவையின் குதூகலத்தோடு
பலநூற்றாண்டுகள் கடந்து சென்று
ஓலையில் என் காதலை வடித்து
புறாவின் காலில் கட்டுகிறேன்.

பறவையே! சிரம் மழிக்கப்பட்ட
பனைமரம் போல் நெடிதுயர்ந்திருக்கும்
செல்போன் கோபுரங்களின்
கதிரியக்க கண்களில் படாமல்
எப்படி எடுத்துச் செல்ல போகிறாய்
ஒரு யுகாந்திரத்தின் காதலை..

**ஷைள**

ஓவியனை நிகர்த்த தத்ரூபமொழியில்
சுயாதீனமாய் அலையும்
பட்டாம்பூச்சி உணரிகள்

பிரபஞ்ச அசைவில்
தொக்கி நிக்கும்
நெகிழ்ச்சியின் மதகுகள்

ஊடலில் விலகிய எழுதுகோலில் படிந்திருக்கும்
ஒளிக்கும் நிழலுக்குமான கூடலை
சிலாகிக்கும் சிதிலமடைந்த சுவர்

படர்க்கைப்பகல் விழுங்கிய பொழுதுகளை காவிச்
சென்று
உயவும் அடர்இருள்
சாம்பலாகிக் கரைகின்றது

பொளியும் உளிகள்
உழிஞ்சில் மரவுரி களைய
ஒரு உருபு மயங்கி நிற்க
அந்தியின் மந்தகாசம்
மெல்ல விரவும் திசையில்
வேய்ங்குழல் இசைக்கின்றது
காற்று

கரித்த மனதின் எக்களிப்பு
கடல் நனைந்த முத்தங்களால்
நிரம்பியிருக்க தொடுவானப்புள்ளிகளின்
கரைகளில்
கால் நனைக்கின்றது மேகம்

**மின்ஹா (மின் மினி)**

அந்த வீடு பூட்டியே கிடக்கிறது.
அந்த வீட்டின் வழியேதான் சூரியன்
போகிறது வருகிறது.
போகும்போதும் வரும்போதும் அலட்சியமாக
அந்த வீட்டை ஒரு பார்வை பார்த்துவிட்டு
செல்கிறது.
எத்தனையோ இரவுகளும் பகல்களும் அந்த
வீதிக்கு வருகின்றன பின் மறைகின்றன.
எல்லா இரவுகளும் பகல்களும்
அந்த வீட்டுக்குள்தான் ஒளிந்திருக்கும்
என்று நினைக்கிறேன்.
ஒரு நாள் அந்த வீட்டுக்கு சொந்தக்காரன்
வந்து கதவை திறக்கும் போது இரவுகளும்
பகல்களும் தெருவில் உருண்டோடும்
அழகை நான் கற்பனை செய்து
கொண்டேதான் ஒவ்வொரு நாளும் அதை
கடந்து போகிறேன்.
மற்றபடி புதர்மண்டிக்கிடக்கும் அதன்
தனிமையை எட்டி எட்டிப் பார்க்கும்
சூரியனை அது எப்போதும் மதிப்பதில்லை.
இரவுக்குள் இருந்து ஒரு பகலை வெளியில்
எடுத்து கைதட்டல் வாங்கும்
வித்தைக்காரன்தானே
இந்த சூரியன் என்ற நினைப்பும்
அதற்கொரு காரணமாயிருக்கும்.

**கார்த்திக் திலகன்**

# தூரிகைத் துயரம்

பார்ப்பவரை பரவசங்கொள்ள வைக்கும்
அற்புத ஓவியங்கள் தீட்டும் முனைப்புடன்
தனிமையிலமர்ந்து வரையத் துவங்கினேன்

அந்திவானத்தின் எழிலைத் தீட்ட
தூரிகையைத் தோய்த்தேன்
சிவப்பு வண்ணத்தில்
திரைச்சீலையில்
பற்றியெரியும் பசித்த வயிறுகளானது

உருக்கிய வெள்ளியாய் ஒளிரும் நதி
திரைச்சீலையில் வானவில் விரிந்தது

ஓங்கிய பெருமரங்கள் அடர்ந்த கானகமொன்று
அடுத்தென் விழைவானது
திரைச்சீலையில் வெட்டுப்பட்ட
மொட்டை மரங்களின் அடிக்கட்டைகள்
நிரம்பலாயின

துள்ளித்திரியும் மான்களின் கூட்டம்...
கோடுகள் உருவாக்கின
பட்டறைகளிலும் பட்டாசு தொழிற்சாலைகளிலும்
குழந்தமைத் தொலைத்த இளஞ்சிறார்களை

பிறகு
தனக்கான ஓவியத்தை தானே தீட்டிக்கொள்ள
விட்டுவிட்டேன் தூரிகையை.

**சக்தி அருளானந்தம்**

1) மடக்கிவைத்த குடைக்குள்
பத்திரமாய் இருக்கிறது,
நின்றுவிட்ட மழையில்
கொஞ்சம் விரிக்கட்டுமா
இந்த மஞ்சள் வானத்தை!?

2) உலராத உடுப்புகளை
எடுக்க ஓடுவதும்
பின் உலரவைப்பதுமாய் திரிகிறாள்.
என் மனைவியோடு
விளையாடுவதே
இந்த மழைக்கு வேலையாகிவிட்டது.

3) முதல் கப்பல்
சைக்கிளில் முட்டி நிற்கையில்,
இரண்டாவது கப்பலை
சாய்ந்தபடியே முந்துகிறது
மூன்றாவது கப்பல்.
நான்காவது கவிதையை
கிழிக்கிறாள் மகள்

4) ??

**நிலாகண்ணன்**

# மாட்டுக்காரனின் பதில்

மேகமுருவி இரண்டு நாள்களுக்கு முன்பாக
கிணற்றுப் புதரோரம் வீசப்பட்ட உயிர்
கறுத்து ஊர்தாண்டியும் பொழிந்துகொண்டிருந்தது
காற்றில் தள்ளாடிய வெண்நிறக் குடையை
இழுத்துப் பிடித்து நடந்தான் மாட்டுக்காரன்
குறுக்காக தட்டுப்பட்ட தஆற்றுக்கரையொட்டிய
தோட்டத்தை தன்சாதிக்காரனிடம் விற்றவன்
கூட்டம் சேர்த்தபடி எதிரே வரலானான்
அருகே நெருங்கியபோது முதலில் அவனே
வணக்கம் சொன்னான்
பதிலுக்கு இவனும் வணக்கம் சொல்ல
தரைதட்டிய நாணலற்ற மனத்தில்
கீழிறங்காமல் ஓடியது நீர்
சற்றைக்கெல்லாம் நிறைந்து பெருகிய வெள்ளத்தில்
உபமாய் நீச்சலையும் விற்றிருந்த அவன்
மூழ்கிப் போனான்
கணத்தில் கூட்டத்தை தன்பக்கம் மடைமாற்றிய
மாட்டுக்காரன் ஈரிரண்டு கிணற்றுப் புதர்களை
ஆடுமாடு மேய அப்படியே விட்டிருந்தான்
வருங்காலத்தில் அங்கேயும் உயிர்கள் கறுக்கும்
அப்போதும் நாம் மாட்டுக்கு முன்னுரிமையாய்
இறைஞ்சுவோம்.

**நூற்பவினைஞன்**

கொடும்பசி கண்டு
சுருண்டு படுத்திருந்த
பிச்சைகாரனின்
நசுங்கிய தட்டில்
மழைநீர் தளும்பிகிடக்கிறது;
மழை மேகத்துடனான
பரந்த ஆகாயமும்
பிம்பமென அதில்
விழுந்துகிடக்கிறது;
விரைந்து கடக்கும்
வாகனங்கள் வாரியிரைத்த
ஒரு துளி நிலமும்
சேறென தட்டில் ஒட்டி கொண்டிருக்கிறது;
சர்வ திக்குகளிலும் வியாபித்திருக்கும்
காற்றது அத்தட்டை
ஊடாடிய வண்ணம்தானிருக்கிறது;
பிரபஞ்ச மூலக்கூறுகளான
நான்கு பூதங்களையும்
ஒரு சேர அந்த தட்டினுள்ளே
பார்த்துவிட்ட தத்துவார்த்த திருப்தியில்
அவன் வயிற்றுக்குள் கனன்றபடியிருக்கும்
அந்த ஐந்தாவது கொடும் பூதத்தை
உங்களை போலவேதான்
கண்டும் காணாமல்
கடந்துதான் வந்தேன்...

**கோ. ஸ்ரீதரன்**

அம்மாவின் விசும்பல் சத்தமின்றி
நான் உறங்கிப்போன இரவுகள்
இருந்ததாய் நினைவில்லை
நிசப்தமான இரவுகள்
நிலைத்ததாய் நியாபகமுமில்லை

அப்பாவின் உளறல்கள் எப்போதும்
அம்மாவின் அலறல்களுக்குப்பின்னே
அமைதிபெறும்

அவர் தள்ளாடி வரும்போதெல்லாம்
எதிர்காலம் எக்காளமிட்டு சிரித்துக்கொண்டிருக்கும்

அவர் மதுவை
வீட்டிற்கு அழைத்து வருவார்
மது எங்களை
வீதிவரை இழுத்து வரும்

அம்மாவின் அலறல்கள் ஓய்ந்துபோன
அந்நாளில் நிலவிய நிசப்தம் விசத்தை
உமிழ்ந்துகொண்டிருந்தது.

**நிவேதா சுப்பிரமணியம்**

அரவத்தின் தீண்டல்

என் தூங்காவனத்தில்
சொல்லெடுத்துக் கூடுகட்டி
சென்றவன் எவனோ
இழுத்துவாருங்கள் அவனை
அள்ளக்குறையாத அட்சயமாய்
சிதறித்தெளிக்கிறதே
சொற்திவலை
தீந்தமிழில் தீரத்தீர
தீரனவனை அரவமெனத்
தீண்டவேண்டும்
ஆர்த்தெழுகிற அவனன்பில்
ஆழியின் ஆழமாய் -என்
அடங்கிப்போன பிடிவாதம்
கெட்டவன் என்கிறான்
பட்டவன் தன் பாட்டினில்
தீக்குள் விரலை வைத்தேன் அவனைத்
தீண்டும் இன்பம் தோன்றியதே
தீர்க்கதரிசியடா பாரதி நீ!!...

**லதா நாகராஜன்**

நீங்கள் போண்டா வாங்கிய
பாரீஸ் கார்டன் கேரிபேக்கும்...
கிழிந்த டீசர்ட் வாங்கிய
உஸ்மான் ரோடு பிளாஷ்டிக் மஞ்சள்பையும்.....
தெய்வ குற்றம் போல-
மனைவிக்கு ஒளித்து ஒளித்து வாங்கிய
பர்மா பஜார் மூலைக்கடை நாப்கின் கவரும்......
மரியாதைக்குரிய குடிகாரர்கள்
கடற்கரையோரம் தூக்கி வீசிய
காலி தண்ணீர் பாக்கெட்டுகள்......

இன்னும் கொஞ்சம்
ஏரியாக்களைச் சொன்னால்
என்னை எதாவது
தொலைக்காட்சியில்
சமூக ஆர்வலரென்று பேச சொல்வார்கள்....

பெருமைப்பட்டுக் கொள்ளாதீர்கள்
எல்லா ஏரியாக்களும் தான்.......
தூர்வாறுங்கள்
மண்டிக் கிடக்கிறது...
உங்கள் அசால்டுத்தனம்......

**பொள்ளாச்சிமுருகானந்தம்**

விரட்டி வந்த மழையால்..
நனைந்துபோன உடலோடு..
தஞ்சம் புகுந்தேன்..
ஒரு தேநீர் விடுதிக்குள்..

தேநீர் சொல்லி,
வெண்சுருட்டொன்றை..
பற்றவைத்து குளிர் காய்ந்திருந்த வேளையில்..

தோள்தட்டி அழைத்த தளர்ந்த குரலொன்று..
அய்யா என்றழைத்து கையேந்த..
எனக்கு வந்த தேநீரை...
அந்த கைகளைப்பற்றி கொடுத்தேன்..

என்னை வைத்த கண் வாங்காமல்..
பார்த்தவாறே மிடறு மிடறாக..
பருகி முடித்து..
கலங்கிய விழிகளை தன் விழிகளை..
முந்தானையில் துடைத்துக்கொண்டு..
கைகூப்பி விடைபெற்றுக்கொண்ட..
அந்த ஆச்சியின் கண்களுக்கு..
நான் யாராக தெரிந்தேனோ தெரியவில்லை..!

ஆனால் என் கண்களுக்கு..
அவள், செத்துப்போன
என் செல்லம்மா ஆச்சியாகவே தெரிந்தாள்..!

**ம.செல்வகணேஷ்**

ஆண்மகனோ
பொறுப்புத்துறப்புற்று
துள்ளித்திரியும் காளையாக
காலமெல்லாம் வாழ எண்ணி
தன்னை தூக்கிச்சுமக்கும்
தேவதைப்பெண்ணுக்கே
மனு போடுகிறான்

தேவதைப்பெண்ணவளோ
தன் பாதமும் நோகாமல்
தன்னை பொத்திக்காக்கும்
தேவதூதனையே தேடிக்களைக்கிறாள்

வெள்ளியிலிருந்து முளைத்த பெண்ணும்
செவ்வாயிலிருந்து சீறிய ஆணும்
பாழ்பூமியில்
மனம் பொருந்தாமல் மறுதலிக்கும்
வதை ஏனோ

தாயை தாரத்தில் தேடும்
மகனாக ஆண்
தந்தையை கொண்டவனிடம் தேடும்
பேதையாக பெண்

தேடலே வாழ்க்கையாம்
காலம் முடியும்வரை முடியாத தேடலில்
என்ன ஒரு சுவாரஸ்யம்
இருந்துவிடப்போகிறது

நூல்பொம்மை நம்மை ஆட்டிவைக்கும்
இறைவனுக்கு வேண்டுமானால்
இது ஒரு தீராத திருவிளையாடலாகலாம்.

**காயத்ரி**



பிறந்தது முதல்
அவளிடமிருப்பது
ஒரே துப்பட்டாதான்
இரவின்
நிறம் உங்களுக்குப்
பிடிக்குமாயின
நிறம் பற்றி
எடுத்துரைக்க
சௌகரியமாகப் போகும்
மூன்று விளக்குகள்
தரித்த பொழுதுகளில்
மூன்றாம் பாலினமாகிறாள்
கைபேசியை கன்னத்தில்
அணைப்பவர்களுக்கு
தெரிய வாய்ப்பில்லை
இலக்கியவாதிகள்
கேட்கிறார்கள்
தனமில்லாத அவளுக்கெதற்கு
துப்பட்டா
அவர்களுக்காகவே
இதைச் சொல்கிறேன்
வெறுமனே இருக்கும்
மார்பைத் தவிர்த்து
ஒதுங்கும் உங்களால்
கல்விப்பால் சப்பும்
ஒரு உயிர்
அனாம்பத்தாகப் போகிறது

**சே தண்டபாணி தென்றல்**

தாவிக் கொண்டிருந்த மனம்
பிடித்திருந்த கிளை முறிந்து விழுகிறது,
சலனமற்ற காற்றில் மிதக்கும் பறவைகள்
சஞ்சலத்தைக் கழற்றி விடுகின்றன
மௌனம் சூழ் வெளியில்
மயானம் அமைதி பூத்துக் கிடக்கிறது,
தேடல்களின் மிச்சங்கள்
பூமியெங்கும் இறைந்து கிடக்கின்றன,
ஜனனம் போல் மரணமும்
மரணம் போல் ஜனனமும்
மாயன் நுழைத்த பதுமைகளாக...
நான் நீ சொற்கள் சண்டையிட்டுக் கொள்கின்றன,
நழுவிக் கிடக்கும் பூமியின் கோபம்
கடலுக்கடியில் பெருமூச்சு விடுகிறது...
அத்துணைப் பேரும் உள்ளமர்ந்துக் கொள்ள
ஆறடியிடத்தை இன்னமும்
ஆழமாக அகலமாக அகழ்கிறார்கள்
பகலின் நிழல்தான்
இரவென்று சொல்லிவிட்டுப் போகும் நாடோடியை
எல்லோரும் ஏளனமாகப் பார்க்க...
தட்டையான மனிதர்களிடம்
உலகம் உருண்டையென்று சொல்வதில்
என்ன நியாயம் இருக்கப் போகிறது?
இந்தக் கவிதையைப் படித்ததும் புதைத்துவிடுங்கள்
இல்லையென்றாலும்
சற்று நேரத்தில் இது எரிந்துவிடும்.

**முகமது பாட்சா**

கனவை, கண்டு முடிப்பதற்குள்
எழுப்பியது யாரெனத் தெரியவில்லை.
அதுபோன்றதொரு
நிறைவேறாக் கனவை
இனிக் காண்பதும் அரிதே.
யாரோ உப்புமூட்டை தூக்கிச் செல்கிறார்கள்.
உப்பு மூட்டை மேல்
உப்பு மூட்டை மேல் உப்பு மூட்டை.
மேலிருக்கும் உப்பு மூட்டை
திடீரென மரத்தில் மாட்டிக் கொள்கிறது.
ஒன்றும் சிக்காத குரங்கு
கீழே தள்ளி விட்டதில் இடுப்பொடிந்து கிடக்கிறான்
உப்பு மூட்டை தூக்கியவன்.
ஓங்கி ஒலிக்கும்
அவன் மனதின் குரல்
காதில் விழாமல்
கடந்து செல்கிறார்கள் பாதசாரிகள்.
நகர்ந்து நகர்ந்து
சாலையோரம் வந்தவன்
கனவைத் தான்
யாரோ கலைத்து விட்டார்கள்.
கனவை வாழ்வோடு இணைக்க
வலியுறுத்தும் எண் மீது
காலைத் தூக்குகிறது
கோரக்கனவு கண்ட ஒரு தெருநாய்.

**மா. காளிதாஸ்**

கசாப்புக்கடைக்காரின்
ஒவ்வொரு கத்தி வீச்சையும்
அச்சத்துடன் பார்த்த
கூண்டுக்கோழிகள்.
தூக்கப்பட்ட கோழியைப் பார்த்த விரைத்த ஐஸ் மீன்கள்.
இன்றைய மதிய உணவை எண்ணி
எச்சிலூறும் நான்.
இருந்தாலும் பாக்கித்தொகையில் கூட
லேசாய் இருக்குது ஒரு நாற்றமும்,
ஒரு துளி ரத்தமும்!

**மதுசூதன்**



முற்றிய இலை
சற்று கூடுதலாய் சுமக்கிறது
மழைத்துளிகளை.

நனையாமலே
சிலிர்க்கவைக்கிறது
இலையின் மேல் மழைத்துளிகள்.

மழைக் காற்றில்
கலைந்து கூடும்
குடிசையும் அழகுதான்.

நீ தத்தித் தத்தி
செல்லும்போது கூடுதல்
அழகாகிறது வயல்வெளி.

கொடிகள் மூடிய மரம்
பூமிவரைத் தெரிகிறது
காய்ந்த கொடியொன்று.

பசுமையான வயல்
திரும்பிப்பார்க்க வைக்கிறது
சோளக்காட்டு பொம்மை.

**கவி. விஜய்**



# கீதாஜோவின் வன அத்தியாயம்

அறிமுகமில்லாத இடத்திற்கு
அழைத்துச் செல்லும் பறவையின் பாதையெங்கும்
கிடக்கும் பிணங்களுக்கு மேலே
புறாக்கள் பறப்பதில்லை
வனத்தையே கொள்ளையடிப்பதற்காக
சட்டப்புத்தகத்தை திறந்து படித்த கீதாஜோவுடன்
பட்டாம்பூச்சிகள் நடத்திய பேச்சுவார்த்தை தோல்வி
தெரிந்திருந்தும் பூக்களெல்லாம்
காற்றுவெளியிடை ரகசியம் கசியவிட
கடுங்கோபத்திற்கு ஆளாயின
வறண்டகாலத்திலும் காத்துநின்ற காவல்மரங்கள்,
புல்வெளிப் பனித்துளியின்
ஆழ்ந்த தியானத்தை கலைக்கும்
பழுத்த சருகுகளின் உதிரல்கள்
எந்த நேரத்திலும் மாதாகோவில் சென்றாலும்
எரிப்பதற்கு சின்ன மெழுகுவர்த்தி இருக்குமென
அறிந்தவள் அவளோடு கைகோர்த்து கடந்த
சமயத்தில்
கண்ணீரைச் சேமிக்கும் மலர்களின் இதழ்களில்
புன்னகையைத் தவழச்செய்யும் வைகறைச்சூரியன்
எட்டிப்பார்க்க
கொளுத்தப்பட்ட கற்பூரம்போல்
புகைந்து ஆவிவிட்டுக்கொண்டிருந்தது
காடெங்கும் மெல்லிய வாயில் வயல்வெளிகள்
திறக்கப்படாத அடர் நிமிடத்தின் கதவுகளைத் திறக்கும்
திறவுகோலாய் வண்டுகளின் ரீங்காரம்
துரத்திக்கொண்டே முன்னேவிழும் நிழல்போல்
கூடவந்தபடி இருக்கும்பொழுதுதான்
வெகுதொலைவல் பள்ளிமார்கள்
களைக்கொத்திகளோடு வந்துகொண்டிருந்தார்கள்
பார்த்த யாவும் பளப்பளவென
வனந்தாண்டி வந்தபிறகும் வெளிச்சமிட்டது
இப்போதும்

**வாலிதாசன்**



# எனக்குள் ஒரு பலூன்

எனக்குள் ஓர் பலூன்
என்னுயிரினாலையே அது
காற்று வாங்கிங்க தொடங்கியது
மெல்ல மெல்ல காற்றேரி
என்னுள் ஏது மாதிரியும் இல்லாத
ஓர் அழகிய மாற்றம் ஆரம்பமாகியது
நாட்கள் செல்லச் செல்ல
பலூனில் துடிப்புடன்
என்னிதயத்தின் துடிப்பும்
ஈர்த்துக் கொண்டது..
நகரும் நிமிடங்களுக்குள்
நட்சத்திரங்களில் தூரல் இலேசாக
என்னில் கொட்டித் தீர்ந்தது...
என் நெஞ்சுக் குழிக்குக் கீழ்
சற்று மேலிட்டுப் போகவே
கொஞ்சம் கொஞ்சமாய்
காற்றடைந்து போன பாலூன்
வெடித்து விடப் போகும்
குறிப்பிட்ட சில நாளுக்காக
காத்திருக்கின்றன!
உடையும் அந்த
நன் நாளில் தான் தெரியும்
எந்தப் பாலினக் குழந்தை
என் உயிர் ஊதிய தேடலென....

**அக்ஷயா**



# மானும் மயிலும்

மானும் மயிலும் சேர்வதுண்டு
மங்கை மனமும் களிப்பதுண்டு ,
ஊனும் உயிரும் கலப்பதுண்டு
உள்ளம் இரண்டும் சேர்வதுண்டு ,
தேனும் கனியும் சுவைப்பதுண்டு
தித்திக்க இரண்டும் இனிப்பதுண்டு ,
கானில் அழகும் தெரிவதுண்டு
கவிதை வடிவில் வருவதுண்டு .

ஆடிடும் கலையில் பரதமுண்டு
ஆட்டிப் படைத்திட சுரமுமுண்டு ,
கூடிடு மன்பினில் இரக்கமுண்டு
கொஞ்சிடு மழலையில் பாசமுண்டு ,
தேடிடும் உறவினில் மாற்றமுண்டு
தினமும் நினைக்க ஏற்றமுண்டு ,
நாடிடும் நட்பினில் பிரிவுமுண்டு
நல்லதை எண்ணிட தெளிவுமுண்டு .

ஆசை மனதில் பிறப்பதுண்டு
அகிலம் முழுதும் சிறப்பதுண்டு ,
பாசம் மண்ணில் நிலைப்பதுண்டு
பரிவும் கண்ணில் தெரிவதுண்டு ,
வேசம் ஒருநாள் கலைவதுண்டு
வண்ணம் அதிலே புலர்வதுண்டு ,
நாசம் முடிவில் மலர்வதுண்டு
நன்மை உலகம் பெறுவதுண்டு .

ஆறும் கடலில் குதிப்பதுண்டு
ஆனந்த கீதம் இசைப்பதுண்டு ,
சேரும் நட்பிலும் கலங்கமுண்டு
சிவந்த நிலவிலும் கருமையுண்டு ,
வீரம் எங்கும் விளைவதுண்டு
விவேகம் அதிலே மறைவதுண்டு ,
ஈரம் மண்ணில் இருப்பதுண்டு
இரக்கம் மனதில் கசிவதுண்டு .

**அ.முத்துசாமி, தாரமங்கலம்**

ஓடும் கடிகாரம்
மெதுவாகவே நகர்கிறது
முட்கள்

**சாண்டில்யன் விவேகானந்தன்**

# பூவுலகின் நண்பர்கள்

காட்சிக்கு உள்ளே செல்லுங்கள்;
காட்டுக்குள் இரண்டு பேர் போகிறார்கள்;

"சிதடிகளின் ரீங்காரம் குறைவாகக் கேட்கிறது;
இது மனிதர்கள் அத்துமீறியுள்ள காடு;
துளைக்கருவி இசைக்கு அவிழும் பூக்களை
சிதைந்துள்ள இக்காட்டில் நான்
எப்படி கண்டடைவேன் எனத் தெரியவில்லை;"
பூவுலகின் நண்பன் கவலையுற்றான்;

"மீன்கள் நித்திய தனிமையிலிருக்கும் ஓடையில்
இன்னமும் நீரோட்டமிருக்கிறதென்று நினைக்கிறேன்
அலைகளின் சத்தம் கேட்கிறது"
நினைவை மடை மாற்றினான் காடோடி;

"இதோ, லாரிகள் சென்றுள்ள வழித்தடம்:
சக்கரங்கள் வலுவாக அழுந்தியுள்ளன;
நல்ல எடை கொண்ட மரங்களை
பாவிகள் வெட்டியிருக்கிறார்கள்"
பூவுலகின் நண்பன் புலம்பினான்;

"தீயில் சுட்ட சருகு மானின் இறைச்சியை
கடித்துக்கொண்டு
குடித்துக் களியுறும் பழங்குடிகளின் ஊர்
அருகில் இருக்கிறது; அங்கு செல்வோம்;
நாம் அமைத்திருக்கும் தற்காலிகக் குடில்
கோபத்திலிருக்கும் யானையின் கண்ணில்
பட்டுவிடக்கூடாது;"
ஆபத்தை உணர்த்தினான் காடோடி;

"இங்கிருக்கும் ஓலம் நம்மைத் தூங்கவிடாது; நாம்
விழித்திருப்போம்;
ஈர மலத்தின் வாசம் காற்றில் கலந்திருக்கவில்லை;
விலங்குகளால் இடர் நேரும் வாய்ப்பு குறைவுதான்;
நாம் நிலவைப் பார்த்தபடி படுத்திருப்போம்;"
பூவுலகின் நண்பன் காத்திருக்க விரும்பினான்;

"அழிந்துள்ள காட்டின் துயரத்திலிருக்கும்
மீதமுள்ள மரங்களின் கேவல்
நெஞ்சைப் பிளந்துவிடும்; இங்கிருந்து போய்விடுவோம்;"
காடோடி அஞ்சினான்;

காட்சியை விட்டு வெளியேறுங்கள்;
காட்டை விட்டு அவர்கள் வெளியேறுகிறார்கள்;

வெறும் தக்கையாக, உடைத்துப் பிளக்கப்பட்ட
புல்லாங்குழல் ஓடையில் மிதப்பதை மட்டும்
நீங்கள் காண வேண்டாம்; அது இசையின் பிணம்;

**மௌனன் யாத்ரீகா**

பள்ளி விட்டுத் திரும்பும்போது
ஒரு பொன்னந்தி மாலையில்
அறிமுகமானார் அந்த பிள்ளையார்....

முட்டுச்சந்தின் மூலையில்
நாயொன்றின் துரத்தலிலிருந்து
தப்பிக்க அடைக்கலம்
கொடுத்ததினால் அத்யந்த நண்பரானார்...

அன்றிலிருந்து
சிலேட்டு குச்சி முதல்
சர்க்கரை மிட்டாய் வரை
பகிரப்பட்டது ...

அவ்வப்போது சண்டை வந்து
முகம் திருப்பினால்
ஏதாவது ஒரு மாமிமூலம்
சுண்டல் கொடுத்து சமாதானப்படுத்தி விடுவார்...

கடைசி இருக்கை கோமளா கிள்ளியது
 தம்பி கேலி செய்தது வரை...
பள்ளிக்கதை வீட்டுக்கதை
எல்லாம் அவருக்கு அத்துபடி..

திடீரென ஒரு மழைநாளில்
நான் பெரிய மனுஷியாகி விட
பிள்ளையாரும் கடவுளாகி விட்டார்..

இப்போதெல்லாம் நானும்
பிள்ளையாரும் பேசிக்கொள்வதேயில்லை..

**மதுரா**



# அம்மாவுக்கு கடுதாசி வெளிநாட்டிலிருந்து...

நலந்தான் ஆத்தா
நாங்கல்லாம் இங்க..
நிம்மதிதானா
நீங்கள்ளாம் அங்க..

ஆடுமேய்க்கிறேன்னு
அதுகளோடு சுத்தாத..
வெள்ளாமை பாக்குறேன்னு
வெயில்லையும் சுத்தாத..

ஊரைவிட்டுவந்தாலும்
உங்களைத்தான் உசுருக்குள்ள
தாங்கியிருக்கேன்..
கட்டம்போட்ட சேலையும்
கல்லுவச்ச தோடும்
தங்கச்சிக்கு வாங்கியிருக்கேன்..

மருங்கிவய வெளஞ்சா
கருப்பனுக்குப் பொங்க வையி..
வெளையாமப் போச்சுன்னா
பந்தியில நொங்க வைய்யி..

வந்த மொதநாளே விழுந்திருச்சு
ஊர்ல ஆடுன பல்லு..
கந்தசாமி பழனிவேலு எல்லாரையும்
கேட்டேனு சொல்லு..

போனவாரம் வாத்தியாரு வீட்டு
ஃபோனுக்கு கூப்ட்டுருந்தேன் ஒன்ன..
நீ இல்லைனு சொல்லி அவுக
பொண்டாட்டி வச்சுபுட்டா ஃபோன..

ஓமகன் உறங்காம
நீ ஒறங்க வழியில்லை..
ஓங்குரல் கேக்காம இங்க
ஓடம்புக்கே சரியில்லை..

ஏமகனச் சுமக்க
நீயிருக்கவேணும்..
பேரப்புள்ளைய தலையில
பேனெடுக்க வேணும்..

கடல்தாண்டி கெடக்குறது
என்னவோ போலிருக்கு..
அப்பன் போன ஆத்தங்கர
நீபோக நாளிருக்கு..

நா அனுப்பாத கண்ணீர
வரவில் வைய்யி..
நா அனுப்புற பணத்த
செலவு செய்யி..

கடிதத்த முடிச்சுகிறேன்
கண்ணீரத் தொடைச்சுக்க..
கடவுளத் திட்டாத
காலமுனு நெனச்சுக்க ....!!

**முத்து முத்து**

# மனிதம் மறக்கும் சகதிகள்

வாள்கள் விளையாடிய
ஒரு போர்க்களத்திலிருந்து
அப்போதுதான் திரும்பியிருந்தது
அந்தக் கருங்குதிரை
தரையைத் தொட்டுக் குருதி கலந்த
சிரசுகளைப் பற்றி
மீசையால் கதை எழுதிக் கொண்டிருந்தான்
அவன்

விழிகளைத் தரையில் ஊன்றி
எதையோ ஆழத் தேடிக்கொண்டிருந்தாள்
அவள்
அவன் கொய்த சிரசுகளில்
மனமில்லை அவளுக்கு
மண்ணில் உருண்டோடும் மனிதம்
நினைத்தவாறே
மரணங்களை எண்ணிக் கொண்டிருந்தாள்

அடக்குமுறைகளிலும் அதிகாரங்களிலும்
புதையுண்டு போன அனுதாபங்களை
அலசிப் அலசிப் பார்த்தாள்
கொள்கை கொடிகள் பாய்ச்சப்பட்ட
நெஞ்செழும்புகளைத் தொட்டுப் பார்த்தவாறே
வீரனை ஏறிட...
தரையில் உதறிவிட்டு
காற்றைக் கிழித்தது கரும்புரவி!

முனியாண்டி_ராஜ்



# எனக்கான சிலுவை

துயரநீர்ச்சுழலில் எனது வாழ்க்கைப்படகு
அகப்பட்டுக் கொண்டது
இந்த உலகில் பிரவேசித்த
ஒவ்வொருவரும் பிறரைப் பார்த்து
தாமும் மாம்சத்தை திருப்திபடுத்தவே
கற்றுக் கொள்கிறார்கள்
போகத்தில் திளைக்கும் மக்கள்
கடைத்தேற்ற வந்த உத்தமர்களின்
அழைப்புக்கு செவி கொடுப்பதில்லை
இருண்டகாலங்களில் மாபெரும்
வெளிச்சத்தை நோக்கி நாம்
முன்னேற வேண்டும் என்ற
நோக்கம் அவர்களுக்கு இருக்காது
துக்க ஆறு ஒருபோதும்
மகிழ்ச்சிப் பள்ளத்தாக்கிற்கு நம்மை
அழைத்துச் செல்லாது
அன்பெனும் ஓடையில்
நீந்திப் பாருங்கள்
துக்கத்தின் புதல்வர்கள்
இரட்சிக்கப்படுவார்கள்
வாழ்க்கைப் பாதையில்
எந்த மரணக்கிணற்றில்
தடுக்கி விழுவோம் என
யாருக்கும் தெரியாது
நரகத்தில் வீழ்ந்துபடுவோம் என்று
தெரிந்தும் போகத்தின் பாதையையே
தேர்ந்தெடுக்கிறது மனிதமனம்
வாலிபத்தில் நெறிமுறைகளைப்
பின்பற்றாமல் வயோதிகத்தில்
வானத்தைப் பார்த்து கதறுவதால்
பயனொன்றுமில்லை
துயரக் கடலில் நீந்துவோருக்கு
மரணமே விடுதலையை
பரிசளிக்கும்
உடல் நோய்களின் கூடாரம்
வியாதி ஒன்றே ஞானத்தைப்
பரிசளிக்கும்
சிலந்தி வலையில் சிக்கிய
பூச்சிகள் கடவுளிடம்
பாரத்தைப் போட்டு
முயற்சியைக் கைவிடுமா
காரிருள் பாதையில்
துணிந்து நடப்பவனுக்கு
விமோசனம் மிக அருகில்
இருக்கின்றது
வாழ்நாளில் ஆணிகளைநிறைய
சேகரித்துக் கொள்
நீ விருப்பப்பட்டாலும்
சவப்பெட்டியிலிருந்து
வெளியே வரமுடியாதபடி.

**ப.மதியழகன்**

அந்த கண்களில் இருந்து எதுவும்
தப்புவதேயில்லை
துருவி துருவி பார்க்கும்
நடவு வயலில் நாற்றை
இலகுவாய் பிரித்து சேற்றில் ஊன்றுகையில்
அதனோடு தானும் சேர்ந்து மேலெழும் அந்த
கண்கள்
கூலி குறைவென கூப்பாடு போட்டாலும் சகதி
படாத அந்த கண்களை யாரும் சாட்சிக்கு
எதிர்பார்ப்பதில்லை

குருதி சொட்ட சொட்ட வெட்டிய அரிவாளில்
கௌரவக்கொலையை கண்டெடுத்த அந்த கண்கள்
இரத்த கறை படியாததால் சாட்சி கூண்டுக்கு
சாத்தியமேயில்லை

ஊறும் மரவட்டையென
கூட்டநெரிசலில் ஊறிய அந்த விரலின் காமம்
அந்த கண்களில் தொற்றி கொள்ளாததால்
தட்டிக்கேட்க வாய்ப்பில்லை

இரவு
இமை திரையை இழுத்து
மூடும் வரை எல்லாவற்றையும்
பார்த்த அந்த கண்கள்
தான் பார்ப்பதை யாரும்
பார்த்திடாத வகையில் பார்க்கும்
எழுத படிக்க தெரியாதவர்களுக்காக
எழுதி எழுதி குவிப்பதைப்போல்......

**மலர்**

பார்த்துக்கொண்டிருக்கும் போதே
சட்டென்று திறக்கிறது
இந்த நொடி
அதற்குள்ளிருந்து புதிதாய் முளைக்கிறது
ஒரு செம்பருத்தி மொட்டின் தலை

செம்பருத்தி மொட்டின் தலைக்கு மேலாக
படமெடுக்கிறது
முதல்பறத்தலுக்கு தயாராகும்
குருவிக்குஞ்சு ஒன்றின் விரியும் சிறகுகள்

குருவிக்குஞ்சை கைகளில் எடுத்து
வானத்தை நோக்கி மெல்லப்பறக்கவிட்டு
கண்ணுக்கெட்டும் தூரம் பார்த்து விட்டு
செம்பருத்தியிடம் திரும்பி புன்னகைக்கிறேன்

ஏற்கனவே இரவுப்பூச்சிகள்
ரீங்காரிக்க ஆரம்பித்திருந்தது
எல்லையின்மையில் பாழில்

**தங்கேஸ்**

# துர்மணம் வீசும் பூக்கடை

அவர்களிடம் செல்லும் எவருக்கும்
ஒரே முகம்.
அது காமுகம்.

பகலில் மத போராட்ட
ஊர்வலம் நடத்திவிட்டு
இரவில் இரகசியமாய் சேரும்
எவனுக்கும் அவர் மதம் சம்மதம்

வாசலுக்கு வெளியே வைத்து
அன்னம் பரிமாறும் சாதி ஆச்சாரம்
அவர்கள் வாசல் நுழைகையில்
தழுவும் சோசலிசக் கலாச்சாரம்

இல்லாத நோயை
இன்புற்று வாங்க
இழிஞர்கள் நாடும் நோயகம்

நம்பவைத்துக் கழுத்தறுக்கும்
பத்தினிகளிலும் பார்க்க தம்மை
நம்பி வருபவர்களுக்காக
களங்கம் சுமக்கும் உயர்ந்தவர்கள்

நவீன ராமனை தேர்ந்தெடுக்கும்
வைபவத்தில் அவர்களை
நடுவராக வைத்து வாக்கெடுத்தால்
ஊருக்குள் குடும்பச் சண்டை பெருகி
விவாகரத்து வழக்குப் பதிவெண்ணிக்கை
அதிகரிப்பை அறியும் வாய்ப்புண்டு.

ஒழுக்கத்தை விற்று உயிர்வாழும்
அவர்களின் பின்னால் ஒரு
பசிக்கழும் குழந்தையோ
நொண்டிக் கணவனோ
கண்தெரியாத தகப்பனோ
பக்க வாத அம்மாவோ என்று
எவருக்கேனும் தியாகம் செய்த
மனதிருக்கக் கூடும்
.
என்றாலும்
கேவலக் கண்களால் பார்க்கும்
சமுதாயத்தின் பார்வையில்
சாக்கடையாய் துர்மணம் வீசும்
அவர்களின் வாழ்வெனும் பூக்கடை மட்டும்

**மெய்யன் நடராஜ்**

# துயரங்களின் மேடை

காற்றின் வேகத்தில்
கரைந்து போகும் கனவுகளில்
தூரத்தெரிகிறது துள்ளியமாய
ஒரு துயரம் மெல்லிய வெள்ளை உடையில
மீட்பாரற்றுப் போகிற தமிழகம்...
ஆரத்தழுவுகிற கைகளில்
எந்தக் கையில் அன்பின்
சின்னம் தெரியா வண்ணம்...
கொசுவுக்கும் கொடுமைக்கும்
கொக்கி போட்டு பிடிக்கிறது
சமரசமில்லாத சங்கடங்கள்...
விவாதப் பொருளால் நிரம்பி இருக்கிறது வீதிகள்
விடை ஒன்றும் இல்லாமலே...
பெருஞ்சீற்றங்கள் புதைந்து போயின
கடற்கரை மண்ணில்
கம்பிகளால் கட்டிப்போட்டு கிடக்கிறது
பறக்க நினைக்கும் சிறகுகள்...
மரப்பாச்சி பொம்மைகள்
அடைந்து கிடக்கும் கூட்டுக்குள்
ஆயிரம் மர்மங்கள்
வரைந்த ஓவியங்கள் கூட
வழுக்கி விழுகிறது சேற்றில்...
முள்ளுடைந்த பேனாக்களுக்குள்
முரண்பட்டு நிற்கிறது தீர்ப்புகள்
பூஜ்யங்களுக்கு மதிப்பில்லாது
சில்லரை தேடினோம்...

**சகா**



உனக்குள்ளும்எனக்குள்ளும் உள்ளிருந்து உறுத்தும்
முள் ஒன்று
ஒரே பாதையைத் தடுக்கிறது !

இருக்கும் என்று சொல்லுமிடத்திலும் இருக்கிறது.
இல்லையென்று சொல்லுமிடத்திலும்
எப்படியாவது இருந்து
தொலைக்கிறது !

எப்பேர்பட்ட நியாயத்தையும்
தன் ஒற்றைக்கீறலில்
அழித்தொழிக்கிறது
அந்த அகோர முள் !

அநியாயத்தின்
பக்கம் அழிச்சாட்டியமாய்
நின்று ஆதரவளிக்கிறது
அந்த அபாய முள் !

இதயத்தை கிழித்தாலும்
மூளையைச் சலித்தாலும்
இருக்கும் இடம் தெரியாது
ஆனால் எப்படியோ எங்கும்
இருந்து தொலைக்கிறது !

நேசம் கொல்லும் அந்த
முள்ளை அழித்து விட
ஆயிரம் பேர் அயராது
உழைத்தாலும்அவர்களையும்
கொன்று விடும்
அந்த அசிங்க முள் !

இரண்டாயிரம் வருடமாக
எமையழிக்கும் அந்த முள்
எம் சமூக வாழ்வின் சாபமுள்!
சகோதரத்துவம் கொள்ளும் முள் !
சமத்துவத்தை தடுக்கும் முள் !
சமாதானம் அழிக்கும் முள் !

யாரகற்றுவது எனத் தேடி
கடவுளிடம் செல்லுகையில்
அட ! கடவுளிடமும் இருக்கிறது
அந்த முள் !
அட ! இங்கே முள்ளே
அந்த கடவுள் தானோ ???

**தஞ்சை தி .இதயராஜா**

திறந்தவெளின்னு பேல வந்த
சின்னக்கா மகள பிரம்பெடுத்து
வெரட்டி வந்த அங்கமாக்கு
அதான் கொள்ளைபுறத்து வாசல்

காக்கா பேண்டாலே பொறுக்காத
அங்கம்மா மனுசன பொறுப்பாளா
எந்நேரமும் யாரு வாரா போறாண்டு
கங்கனம் கட்டி திரிஞ்ச அங்கம்மா வீட்டுல
களவாணிப்பய வந்ததிலிருந்தே
அவ அப்படிதான்

போன வருச இதே நாளில்
பிறுமன போட்டு மொழுகிவச்ச அடுக்குபானைகுள்ள
உமுறகுடிச்சு சேர்த்துவச்ச சுருமாட்டுத் துட்டு
அத்தனையும் களவாணிபயலுக்கு மொய்வச்சிருந்தா

களையெடுத்து கல்லுசுமந்து காவயித்து கஞ்சிகுடுச்சு
கடைசிநாளைக்கி
தூக்கிபோட வச்சிருந்த சாவுமொதலு அத்தனையும்
ஒத்த ராத்திரில கடன்குடுத்தா

அப்ப இருந்து இப்ப வரைக்கும் எறும்ப கூட
எட்டிபாக்கவிட்டதில்ல வீட்டுபக்கம்
தவிச்ச வாயிக்கு தண்ணி கேட்டு
யாரு வந்தாலும் போச்சு
அளந்தெடுத்த ஒரு மடக்கு தண்ணிய ஒன்பதுமறை
உத்துபாத்து குடுக்குற அங்கமாவ கண்டவனெல்லாம்
குருட்டுபய விட்டத்துல பாஞ்ச கதையா தலதெறிக்க
ஓடிஒள ’ஞ்சிருவானுங்க

அங்கம்மா புலம்பலும் அரசவிழுதும்
ஒன்னுனு சொல்லுற அம்மாச்சி
இன்னக்கி வரையும் அழியாத
அவ கதையும் காரணமும்
தீயில வெந்தாலும் தீராத கணக்குனு
அடிக்கடி சொல்ல கேட்டிருக்கேன்

**நிவிகா மித்ரை**



வேறு யாரிடமும் பகிர்வதற்காகாத
கனவொன்றை வைத்திருக்கிறேன்
அது எனதிருப்பின் வெளியை
இன்னும் விரியச்செய்கிறது

இதயத்தை சிறைக்குள் பூட்டிக்கொண்ட பிறகு
விரியத் திறந்திருக்கும் கதவுகளால் என்ன பயன்

வடிவம் மாறியிருப்பினும்
இன்னும் அதுவேதான்
உறுமாற்றத்தில் வருந்த ஏதுமில்லை

பதிலேதும் கிடைக்காத போதும்
மனம் எப்போதும் தேடுதலை விட்டுவிடுவதில்லை

மகிழ்ச்சி ததும்பும் இதயங்கள்
முத்தங்களைப் பரிமாறிக் கொள்ளும் போது
உள்ளழுத்தும் துக்கம் மண்டியிட்டு மன்றாடுகிறது

நேசம் இதயத்தைத் திறக்கும்போது
தனது கூடுகளுக்குத் திரும்புகின்றன பறவைகள்
எப்போதேனும் உடலை எடுத்துச் செல்லும் ஆன்மா
பிறிதொரு கணத்தில்
அனிச்சையாய் திரும்புவது போல

நம்பிக்கையின்மை அதிகரிக்கும் போது தடம்புரளும்
கடப்பின் அனுபவங்கள்
நானென எதுவுமற்று வசமிழந்து போகிறது மனம்

செய்வதற்கு எதுவுமில்லை
என துவளும் கணம் கையிலிருக்கும்
மெழுகுவர்த்திக்கு ஒளியேற்றுகிறது
யாரோ ஒருவரிடம் எரியும் சுடர்

எவரோ வரையும் ஓவியப்பரப்பின்
ஒற்றைப் பிம்பத்தில்
எனது நிழலின் சாயல் படிந்தேதான் இருக்கிறது...

**ஜானு இந்து**



மலர்களின்
மகரந்தத்தில்
ஓயாது உண்டு
திளைத்துத்
தேனாக மாற்றும்
தேனீ
தனது உணவை
தலையில் தூக்கி
வரிசையாக
செல்லும்
எறும்புகள்
தட்ப வெட்ப நிலை
மாற்றத்திற்கு
ஏற்றபடி வாழ
கண்டம் விட்டு
கண்டம்போகும்
பறவைகள்
இவற்றின் அயராத
உழைப்பு உனக்குள்
வரும்போது , வரும்
உயர்வு !

**சரஸ்வதிராசேந்திரன்**

பருவமழை பொய்க்கவில்லை
இடைவிடாது கொட்டுகிறது
அடை மழை.

'விளைச்சலுக்கு குறைச்சலிருக்காது' என்ற
மகிழ்ச்சியில் விவசாயிகள்.

'குடிநீர் விநியோகத்தில் இனி குளறுபடிகளிருக்காது'
என்ற
சந்தோஷத்தில் அரசும் பொதுஜனமும்.

'பள்ளிகளுக்கு விடுமுறை' அறிவிப்பில்
குதூகலமாய்க் குழந்தைகள்.

"தங்குவதற்கு எங்கு போவது?"
என்ற தவிப்புடன்,
நடுங்கும் குளிரில்
நனைந்த ஆடைகளோடு நிற்கும்

இந்த நடைபாதைவாசிகளின்
கவலை குறித்துக்
கவலை கொள்ளத்தான்
யாருமில்லை..பாவம் ..!

**ஆதியோகி**

வெளிறிய கண்களும் உதடுகளுமாய்,
எங்களது மருத்துவ வளாகத்தில்
புதியதாய் அந்த நிறைமாத
கர்ப்பிணிப் பெண்.

புன்சிரிப்பும் அக்கறையுடனான கடிந்து
கொள்ளலுமாய்,
அவளுடனான அரைமணி நேர சம்பாஷனை!!!

கை பிடித்த குடிமகன் எட்டி உதைக்க
வயிற்றிலேயே தன்னை
கலைத்துக் கொண்டது முதல் சிசு.

வளர்ச்சி குறை, உறுப்பு சரியில்லை என
மருத்துவ சிபாரிசுடன்
கலைந்து கொண்டது இரண்டாவது.

எப்படியோ தன்னை கரைத்து உயிருட்டி
எட்டு மாதம் வரை எட்டிய
மூன்றாம் கர்ப்பத்தின்
முதல் மருத்துவ பரிசோதனை இன்று!

ஏழு மாதங்களில் கரு குறித்த
அவளது அலட்சியம் கண்டு
கோபித்த என் கண்களை
பரிதபிக்கச் செய்துவிட்டாள்
தன் கதையில்!

விழிக்கவும் பணிக்கவும் ஆளற்று
கட்டியவன் கைக்கடக்கமாய்
அவனுக்கான அவள் வாழ்நிலையை
கதைக்கத் தொடங்கினாள்.

ஆண்மை என்பது கர்வத்திற்கானதல்ல
கடமைக்கானது என்பதை பாவம்
அவள்போலும் உணர்ந்திருக்கவில்லை.

மன உறுதியென்ற நிலைதாண்டி
மன இறுக்கமென்ற நிலைக்கு
தன்னைத்தானே
இட்டு வைத்திருந்தாள்.

கல்வியில்லா, அவளது
சார்பு நிலை கண்டு
என் பெண்ணிய உணர்வுகள்
வாய்மூடித் திணறியது.

எதிர்பார்ப்பற்ற அவளது எதிர்காலத்தின்
எஞ்சிய நம்பிக்கையை
கருவோடு சேர்த்து
சுமந்து கொண்டிருக்கிறாள்.

கைத்தொழில் ஒன்றை கற்றுக்கொள்,
இனிவரும் பொழுதுகள் உனதாகட்டும்
எனும் கூற்றோடு கூடவே
நிறைவுற்றது அன்றைய பரிசோதனை.

சாரமற்ற அவளின் சிரிப்பும்,
எவ்வித உணர்வுகளையும் பிரதிபலிக்காத
கண்களுமாய்
அவள் கடிந்து போகையில் - ஒரு
செவிலியத்தாயாய் நெஞ்சம் கணத்தது.

**மைக்கேல் மரியா**

# புள்ளி

சிறு சிறு புள்ளிகள்
போதுமானதாக இருக்கிறது
அழகிய கோலம் தீட்டுவதற்கு ..!

கூடுதலாய் ஒரே ஒரு புள்ளி
போதுமானதாக இருக்கிறது
பந்தயங்களில் எல்லாம்
வாகை சூடுவதற்கு ..!

கூர்மையான சிறு புள்ளி
போதுமானதாக இருக்கிறது
ஆழ புதயவிருக்கும்
ஏதோ ஒன்றை
நெம்பி மேலெழுப்புவதற்கு...!

அகண்ட நெற்றிக்கு
வண்ணமாய் சிறு புள்ளி
போதுமானதாய் இருக்கிறது
மங்களமாய் பவனி வருவதற்கு...!

சுகமான கதையோ
சோகமான கவிதையோ
சிறு புள்ளி போதுமானதாய் இருக்கிறது
முடித்து வைப்பதற்கு...!

கறுத்த புள்ளி கன்னத்திலோ
அல்லது உதட்டிலோ
போதுமானதாய் இருக்கிறது
வசீகர தோற்றத்திற்கு...!

எண்களின் ஊடே
முன்னும் பின்னுமாக புள்ளிகள்
போதுமானதாக இருக்கிறது
அளவினை கூட்டுதற்கு.. குறைப்பதற்கு...!

எழுத்தோ, எண்ணோ
எழுதப்படுகையில்
புள்ளியில் ஆரம்பித்து
புள்ளியில்தான் முடிவடைகிறது...!

பெரும்புள்ளிகள்.. சிறு புள்ளிகள்..
என்று
எவ்வளவோ புள்ளிகள்
கரும்புள்ளிகள் ஆகாதவரை
சிறப்புதான்
எல்லா புள்ளிகளும்...!

**சொ. சாந்தி**

எனக்கிருக்கும் கவலையெல்லாம்,
நமக்கு மீண்டும் வால் பரிணமித்தால்,
தாவ மரங்கள் இருக்குமா? என்பதுதான்

**வால்பாறை கணேஷ்**

# அக்கா

இது போன்றதொரு
மழைநாளின்
பின்னிரவில்தான்
கைச்சொம்போடு
ஒதுங்கப்போவதாய்
கொல்லைப்புறம் சென்ற
அக்கா
காணாமல் போனாள்...
நிலைப்படியில்
நெற்றியை இடித்துக்கொண்டது
போல்
நிலைகுலைந்து போனது-
குடும்பம்......
வெற்றிலையில்
மைதடவிப் பார்ப்பவர்கள்
உடுக்கைக்காரர்கள்
குறிசொல்லிகள்
குடுகுடுப்பைக்காரர்கள்
என
எவராலும்
கண்டு பிடிக்க இயலாத
தொலைதூர இருளுக்குள்
தொலைந்து விட்டிருந்தது
அக்காவின்-
இருப்பிடம்..!
எலுமிச்சம்பழங்களும்
குங்குமமும் அப்பிக்கிடந்த
கூடத்தின் நடுவே
இடிந்து போய்
அமர்ந்திருந்தாள்-
அம்மா
தண்டவாளத்தில்
துண்டாகிக்கிடந்த
அடையாளம் தெரியாத
பிணங்களில் எல்லாம்
அக்காவைத் தேடிக்கொண்டிருந்தார்
அப்பா
காத்திருந்து காத்திருந்து
கட்டக்கடைசியில்
காணாமல் போனவர்களின்
பட்டியலில்
அக்காவும்
காத்திருப்போர் பட்டியலில்
நாங்களுமாய்
கனத்த மௌனத்தின்
நரகநிமிடங்களை
நகர்த்தமுடியாமல்
நொடிகளையும் யுகங்களாய்
கடத்திக்கொண்டிருந்தோம்...

இப்படியானதொரு மழைநாளின்
பின்னுமொரு
பின்னிரவில்தான்
தோட்டத்துக்கதவு தட்டப்படும்
சன்னமான ஓசையும்
அதனைத் தொடர்ந்து
தாள்நீக்கும்
அம்மாவின் நிழலுருவமும்
மெல்லிய கோட்டோவியமாய்.....
கசக்கிய கண்களை
இருளுக்குப் பழக்கி
ஊடுருவித் துழாவுகையில்
மெல்ல புலனாகிய
அந்த உருவம்.....
சத்தியமாய்-
அக்காவேதான்.......!
உடலெங்கும் பரவிய
மின்சார அதிர்வோடு
மேலும் உன்னிக்கையில்
குரலுயர்த்தி
ஆணையிடும் அம்மாவின்
சம்பாஷணையும்
மறுதலித்து மன்றாடும்
அக்காவின் விசும்பலும்
புரிபடாமலேயே இருந்தது

அறைந்து சாத்தப்பட்ட
கதவுக்கு அப்பால்
கனத்த இருளில் கலந்து
மறுபடியும்
காணாமல் போனாள்-
அக்கா

அருகில் வந்து படுத்து
முதுகு குலுங்க அழுத
அம்மாவை
அணைத்தபடி உறங்கிப்போனேன்

எபபோதும் போலவே
அம்மா இருக்கிறாள்
இப்போதும்
காணாமல்போன அக்காவை
தேடியபடியும்
அல்லது-
தேடுவதுபோலவும்....

**அழ. இரஜினிகாந்தன்**

கம்பிச் சுருள் தழுவி
சிகப்பு பச்சையென
கண்சிமிட்டும்
கருவிகள் சூழ்
வெண்கட்டிலில்..

உயிர்க்காற்றினை
சுமந்து செல்லும்
மூக்குவழிக் குழாய்கள்
ஊதி நிறைக்கும்
இரட்டை பலூன்களின்
விரிந்து சுருங்கும்
சலனங்களையும்..

வெள்ளெலும்புகள்
வார்த்தெடுத்த
நெஞ்சுக் கூட்டில்
இடது புறம்
குடிகொண்ட
குருதிக் குருவியின்
படபடப்புக்களையும்..

மின்னணுத் திரையில்
ஏறி இறங்கும்
வெண்கோடுகளாய்
அவசரத்தில் வரைந்து
கொண்டிருக்கும்
வாழ்க்கையின்
கையொப்பை...

எட்டிப் பார்க்கும்
கண்ணீர் கண்களுக்கு
காட்சிப் படுத்திக்
கொண்டிருந்தது
தீவிர சிகிச்சைப் பிரிவென
அறிவிக்கும் கதவின்
கண்ணாடிச் சதுரம்..

**ஜி ராஜன்**



# நட்பும்...உறவும்...

ஆழிப்பேரலையின்
ஊழித்தாண்டவத்திற்குப்பின்னும்
நண்டுகளின் கால் தடங்கள் பதித்த கடற்கரை
இயல்பு நிலைக்கு திரும்பி விடுகிறது.

காட்டாற்று வெள்ளம் கரைபுரண்ட பின்னரும்
ஆற்றங்கரை நாணல்களின் நர்த்தனம்
வழக்கம்போல் அரங்கேறி விடுகிறது.

சூராவளியின் கோரவிளையாட்டுக்குப் பின்னும்
இலைகளும் கிளைகளுமாய் மரங்கள்
தங்களை உயர்பித்துக் கொள்கின்றன.

புரட்டிப்போட்ட பூகம்பத்திற்குப்பிறகும் கூட
புற்களும் பூக்களுமாய் இப்பூமிப்பரப்பு
தன்னைத்தானே புதுப்பித்துக் கொள்கிறது.

ஆனால்...

அவமதிப்புக்கும் புறக்கணிப்புக்கும் பிறகு
எந்த ஒரு நட்போ-உறவுவோ
முன்பு போல் இயல்புநிலைக்கு திரும்புவதில்லை.

**ப.இரகுநாதன்**

இப்போது...
தேவைகளற்ற - உன்
நினைவுகள்...
தேவையாகிப்போகிறது...
யாரோ எழுதிய கவிதைகளெல்லாம்...
உனக்கானவைகளாக மாறிப்போவதைத்
தவிர்க்கமுடிவதில்லை...
எல்லா வண்ணங்களோடும்...
உன்னை ஒப்பிட்டபடி...
தூரிகையின்றித் தவிக்கின்றேன்...
நீர்க்குமிழி எனத் தெரிந்தும் கூட - என்
உள்ளங்கையில் பாதுகாத்துக் கொள்கின்றேன்...
நான்
உனைச் சுற்றும் வண்டல்ல...
உனது பேரொளியில்
பொசுங்கிப்போக வந்த விட்டில் என்று
அறிந்தும்...

**ரூஃபஸ் வி ஆண்டனி**

இந்த கோவில்களின்
ஆரத்தி நேரத்தில்
அடிக்கின்ற மணிகள் தான்
எத்தனை விதமாய் ஒலிக்கின்றன..

பிரசாதம் கொடுப்பதற்கு முன்
ஒருமாதிரியும்
வாங்கியபின் வலம் வரும்போது
இன்னொரு மாதிரியும்..

சுப்பிரமணியர் கோவில் மணியோசை
ஒருமாதிரி
மாரியம்மன் கோவில் மணி ஒலிப்பது
இன்னொரு மாதிரி ..
இன்னும் வேறு கோவில்களின் ஒலிகள்
வெவ்வேறு மாதிரி ..

மொத்தத்தில் எல்லாமே
ஈர்க்கும் வண்ணமாகவும்
இனிமையாகவும் தானே
இருக்கின்றன..

எந்த கோவிலின் ஓசை
என்று தெரியாத வரை !

இல்லை..
எல்லாமே ..
எனக்குதான் ஒரேமாதிரியாக
இனிமையாக
தோன்றுகிறதோ..?

கருணா



ஒத்தையடிப் பாதையிலே
-----ஒத்தையில போறவளே
பத்திரமா போய்வாடி
-----பால்நிலவு வருமுன்னே !
அத்தமவன் நானிருக்கேன்
-----அச்சத்த விரட்டிவிடு
சத்தியமாத் துணையிருப்பேன்
-----சாகுமட்டும் உன்னுடனே !!

ஆத்தோரம் போகாதே
-----அலைவந்து முத்தமிடும்
காத்துவந்து மேனிதொட்டுக்
-----காதலுடன் கதைபேசும் !
வாத்துகளும் நீந்திவந்து
-----வரவேற்கக் காத்திருக்கும்
சேத்துக்குள் தாமரையும்
-----செவ்விதழால் சிரித்திடுமே !!

நாணமுடன் நீநடக்க
-----நாத்துகளும் தலையசைக்கும்
நாணல்புல் கரையினிலே
-----நளினமுடன் நடனமிடும் !
ஆணவத்த விட்டுவிட்டு
-----அழகுமயில் ஆடிவரும்
வீணான பயமெதற்கு
-----விரைந்துவாடி என்குயிலே !!

பட்டெடுத்து வந்துனக்குப்
-----பரிசமிட நாள்பார்ப்பேன்
பொட்டுவச்சிப் பூமுடிச்சிப்
-----புதுப்பெண்ணா உனைரசிப்பேன் !
கொட்டுமழை நாளினிலும்
-----குடையின்றி நடந்துவந்து
கட்டிவெல்லத் தங்கமுனைக்
-----கண்குளிரக் காண்பேனே !!

பூவனமும் உனைக்கண்டால்
-----பூரிப்பில் குளிர்ந்துவிடும்
தேவதையே உன்னன்பில்
-----சிக்குண்டுத் தவிக்கின்றேன் !
தாவணியில் மயக்குறியே
-----தாகத்தைத் தூண்டுறியே
ஆவணிக்குள் தாலிகட்டி
-----ஆசையுடன் அணைப்பேனே !!

**சியாமளா ராஜசேகர்**

# ஓவியச் சிற்பி !

வானளக்கத் துடிக்கும்
வண்ணத்துப் பூச்சியின்
வட்டங்களெல்லாம்
முடிவிலிகளில் மூழ்கியபின்
தென்றலொன்று தேடிவந்தது
ஒரு ஓவியத்தின் விலாசத்தை !

இலைபறிக்க வருதென பயந்து
நடுங்கிய மரத்தின் நிழலில்
இளைப்பாறிய பின்
விசாரித்தன காற்றுக்குட்டிகள்
சற்றே சரிந்து உட்கார்ந்தபடி !

அழகியல் தவழும்
அம்முப்பரிமாண ஓவியத்தை
தன் நகம்கீறிக் கிழிந்ததாய்
சற்று தூரத்தில் - அழுது
கொண்டிருந்தது வானம் !

கடந்து சென்ற - ஒரு
ஆவின் மனசாட்சி
ஒப்பாரி சமைத்தது மௌனமாய்
என் குரலின் வெளிச்சம்
ஓவியத்தை சுட்டிருக்குமோவென !

இவையேதும் அறியாமல்
தன் றெக்கைகளை
தூரிகையின் மூக்காக்கி
வேறொரு வெற்றிடத்தில்
மீண்டும் வரையத் தொடங்கியிருந்தது
அந்த ஓவியச் சிற்பி !

**வினோதன்**



சகாய டீச்சர் வகுப்புக்கு மட்டும் அவங்க மேசைக்கு
முன்னாடி போய் உட்கார்ந்து கிடுவோம் நானும்
கமலவேணியும்..
சுமாரா நான் வரைஞ்ச செம்பருத்தி பூவை பார்த்து
கண்களை அகலமாக்கி "அழகு" ன்னு முதுகை தட்டி
சொன்னாங்க..
வகுப்பு ஆசிரியரா அவங்களே வராங்கன்னு சொன்னப்ப
மனசு தூரவானமாச்சு..
வயித்தப்பிடிச்சு குறுகி துவண்டுப்போனவள
என்ன செய்ய பொம்பளைகளோட சாபம்ன்னு
சொல்லி அவங்க வண்டி வச்சு உருட்டிட்டு வந்து
வீட்டுல விட்டாங்க..
பத்து நாள் கழிச்சு திரும்பி வந்தப்போ சகாய டீச்சர்
தவிர எல்லா டீச்சருங்களும் இருந்தாங்க..
கமலவேணி சொன்னா டீச்சர்க்கு மேலுக்கு
முடியலையாம்..ஆசுபத்திரில சேர்த்து இருக்காங்க புள்ள..
சாயங்காலம் போய் பார்க்கலாமான்னு கேட்டா..
சாயங்காலம் எப்படாவரும் காத்திருந்தேன் பாடத்துல
கவனம் இல்லாதவளா..புத்தகத்துல
வெறுமனே வச்ச கண்ணா..
நேரமும் போயி, ஓடோடிப்போனேன்
வீட்டுக்கு கூட்டிப்போய்டான்ங்கன்னு.. எதுகால வந்த
மேரி சொல்ல சிட்டாப்பறந்தேன்..
சகாய டீச்சர் வெள்ளை சேலை கட்டி அழகாயிருந்தாக..
பிள்ளைகள அரவணைச்ச கை அவங்க நெஞ்சில்
வச்சிக்கிட்டு இருந்தாங்க.. பக்கத்தில மெழுகுவர்த்தி
வெளிச்சத்தில் சிரிச்ச முகமா கண் மூடியிருந்தாங்க..
பிரம்பே எடுக்காத பிரம்மாவுக்கு புத்துநோவாம்..
மனசு ஈரமாக கோணல்மானலா நான் வரைஞ்ச
செம்பருத்தி பூவா வந்தேன்...
சகாய டீச்சர விட்டுப்புட்டு..

**சத்யா தமிழச்சி**

வீதிக்கானகப் பெருவெளியில் கம்பீர மரங்களென
கடைகள்.
தலைவிரித்த கிளைகளில் ஓய்வெடுக்கும்
பருந்துகளாய் தேனீரோடு கன்னியரை அருந்தும்
இளவட்டங்கள்.
அடர்ந்த புதரிலிருந்து வெளிப்படும் மானாய்
ஜனத்திரள் விலக்கி நெற்றி வியர்வையை
முந்தனையில் துடைத்தபடி வந்தாய்.
எந்த வரத்தையும்
உன் பட்டு விழிகள் வழங்கவில்லை.
ஆனால் அனிச்சையாய்
பற்றவைத்த சிகரெட்டை அணைத்து மறைத்தேன்.
மறுநாள்
நீ வருவதற்குள்
பைக்கின் கண்ணாடியில் பத்துமுறை தலை
வாருகிறேன்.
காத்திருப்பில் நகம் கடிப்பேன்.
கண்டிப்பாயோவென
விட்டுவிட்டேன்.
இப்போது இந்த உதடுகளில் முத்தமிட சிகரெட்டை
அனுமதிப்பதில்லை.

கொண்டுவந்த ரோஜாவை எப்படி தருவது.
எனக்கும் உனக்கும்தான் அறிமுகம் இல்லையே.

நாத்திகன் என்னை
வீதிப்பிள்ளையாருக்கு
தினம் ஒரு ரோஜா சார்த்த பணித்திருக்கிறது
உன்மீது அரும்பாய் துளிர்க்க நான் வளர்த்து
காத்திருக்கும் காதல்.

**குறிஞ்சி நாடன்**

# திருநங்கை

மூன்றாம் பாலினமென்ற
முத்திரையால்
முகவரி இழந்தோம்...!

கடவுள் செய்த பிழையால்
கைக்கட்டி பிறர்முன்
கையேந்தி நிற்கிறோம்...! எம்மை

ஆதரிக்க
ஆளுமில்லை
அரவணைக்க யாருமில்லை...!

தெரிந்தோ
தெரியாமலோ
செய்வதறியாது
திகைக்கிறோம்...!

கடவுள் செய்த
குற்றத்திற்கு
விடைதான் இந்த
கலப்படமோ...!

பழிசொல்லும்
வசைமொழியுமே எங்கள்
வேதமாயிற்று....!

மாற்றத்தை ஏற்கும்
மனிதா... எம்
மாற்றத்தை ஏற்கா உம்
மனதென்ன கல்லா..??

கருவிதைக்க
விதியில்லை இருப்பினும்
அனைவருக்கும்
அன்னையாவோம்
அன்பினிலே...!

உறுப்பினை வைத்து
உறவினைத் தேடும்
இனமல்ல எம்
இனம்...!

புதைத்தாலும்
புல்லாவோம்...!
எரித்தாலும்
சாம்மலாவோம்...! இதில்
பாலினத்திற்கு
இடமேது..??

ஆணும் பெண்ணும்
சரிநிகர் சமமாம் இதில்
எம்மினத்தை
மறந்தாரோ அல்ல
மறுத்தாரோ..??

**கீர்த்தனா செல்வம்**

படைப்பு குழுமம்

மின் இதழ்: பதிப்பு- 17

20-12-2017